IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 246-2008**

Deposition DW 3 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 07.07.2025 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ராமசாமி ((VAO) சேவகானப்பள்ளி கிராமம் | Father's Name : | திரு.ராமன் |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | 43 |
| பி.வா.சா. : | 3 | | |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | | |

முதல் விசாரணை :

நான் சேவகானப்பள்ளி கிராம கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த சாட்சி சம்மனின்அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சொத்து அமைந்துள்ள கிராமமான சொக்கரசனப்பள்ளி கிராமம் என்பது சேவகானப்பள்ளி கிராமத்தின் கிராமத்தை உள்ளடக்கியது ஆகும். வழக்கு சொத்து யு.டி.ஆர் 'அ" பதிவேடு படி எல்லப்பா மகன் முனிவெங்கடப்பா பெயரில் உள்ளது. அதன் பட்டா எண்.95 ஆகும். யு.டி.ஆர். பட்டா 1984 ம் ஆண்டு வழங்கப்பட்டது. யு.டி.ஆர் காலத்தில் வழக்கு சொத்திற்கு அடங்கல் பதிவேடு யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது. 40 ஆண்டுகளுக்கு முன்பு முனிவெங்கடப்பா பெயரில் பட்டா வழங்கப்பட்டது. முனிவெங்கடப்பா பெயரில் இருந்து பாப்பையா மகன் நஞ்சப்பா பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது சர்வே எண்.10/1ற்கு முனியப்பன் மகன் கிருஷ்ணன் பெயரில் பட்டா உள்ளது.

அதன் பட்டா எண்.312. வழக்கு சொத்திற்கு தற்போது முனியப்பன் மகன் கிருஷ்ணன் பெயரில் சிட்டா அடங்கல் உள்ளது. வழக்கு சொத்திற்கான யு.டி.ஆர். அ பதிவேடு தாக்கல் செய்கிறேன். **( அது சாட்சி சான்றாவணம் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சொத்திற்கான யு.டி.ஆர். சிட்டா தாக்கல் செய்துளேன். **( அது சாட்சிய சான்றாவணம் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சொத்திற்கு பட்டா தாக்கல் செய்கிறேன் **( அது சாட்சி சான்றாவணம் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கு தற்போதைய அடங்கல் பதிவேடு தாக்கல் செய்கிறேன். **(அது சாட்சி சான்றாவணம் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சொத்தை தற்போது கிருஷ்ணப்பா தான் விவசாயம் செய்து வருகிறார்.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**1.** நான் சேவகானப்பள்ளி கிராம நிர்வாக அதிகாரி என்பதற்கான அத்தாச்சி உள்ளதா என்றால் என்னுடைய அடையாள அட்டை உள்ளது ஆனால் தற்போது அடையாள அட்டையை கைவசம் கொண்டுவரவில்லை. எங்கள் கிராம வருவாய் ஆவணங்களுக்கான பதிவேடுகளை கொண்டுவந்துள்ளேன். சாட்சி சான்றாவணம் 8 சிட்டா எந்த ஆண்டு பெயர் மாற்றம்செய்யப்பட்டுள்ளது என்றால் 2016ம் ஆண்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ச.சா.ஆ.7 யு.டி.ஆர் சிட்டா 1984ம் ஆண்டு வழங்கப்பட்டது. நான் வழக்கு சொத்தை புலத்தணிக்கை செய்தேனா என்றால் ஆமாம். ச.சா.ஆ.1 ஆவணம் யு.டி.ஆர்க்கு முந்தைய அ பதிவேடு. ச.சா.ஆ.4 அடங்கலில் வழக்கு சொத்தின் சர்வே எண்.10/1ற்கு எல்லப்பா பெயருக்கு பதிவு உள்ளது. ச.சா.ஆ.5 சிட்டா யு.டி.ஆர்க்கு பிறகு வழங்ககப்பட்டது. அதில் சர்வே எண்..78/10ஏ என்பது அன்னையப்பா மகன் கிருஷ்ணப்பா மற்றும் எல்லப்பன் மகன் முனிவெங்கடப்பா பெயரில் பட்டா எண்.152 ஆக பதிவாகி உள்ளது. ச.சா.ஆ.2ன் சர்வே எண்.10/1 என்பது வெங்கடிகான் என பதிவாகி பிறகு குள்ளப்பா மகன் எல்லப்பா மற்றும் வெங்கடரமணப்பா மகன் அன்னையப்பா ஆகியோர் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ச.சா.ஆ.2ல் சர்வே எண்.78 யார் பெயரில் உள்ளது என்றால் அந்த ஆவணத்தில் உள்ள பெயர் தெளிவாக தெரியவில்லை.

2. ச.சா.ஆ.3ல் சர்வே எண்.78/10 ல் கிருஷ்ணப்பா மற்றும் முனிவெங்கடப்பா பெயரில் உள்ளது. ச.சா.ஆ.1 ஆவணம் சிட்டா அதில் சர்வே எண்.10/1ல் 0.41.0 ஹெக்டேர்ஸ் இடம் பட்டா எண்.11ல் குள்ளப்பா மகன் எல்லப்பா மற்றும் வெங்கட்ரமணப்பா மகன் அன்னையப்பா ஆகியோர் பெயரில் உள்ளது. வழக்கு

சொத்தில் கிருஷ்ணப்பா அனுபவத்தில் உள்ளதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பில் மறுவிசாரணை

என்னிடம் காட்டப்பட்ட ச.சா.ஆ.1 முதல் ச.சா.ஆ.5 ஆவணங்கள் யு.டி.ஆர்க்கு முந்தைய ஆவணங்கள்

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.